திராவிடநாடு

3—6—62 | வாரவெளியீடு

சுமைதாங்கலாமா?

[பொன்னகர். மாணிக்கம்]

*

எடுப்பு:

சுமைதாங்கி ஆவதுமேன் தோழா?—வரிச்
சுமைதாங்கி ஆவதுமேன் தோழா? (சுமைதாங்கி)

உடனெடுப்பு:

அமைக்கின்ற திட்டங்கள் பெயராலே வடக்கு—பயன்
அடைகின்ற சூழ்ச்சிக்குப் பலியாகித் தெற்கே
(சுமைதாங்கி)

தொடுப்பு:

சமைத்திட்ட உணவெடுத்துக் கொள்ளு;—வரி
தாங்காத பொருளென்ன சொல்லு?
இமயம்போல் விலையேற்றம் தெரிந்தும்—உன்
எழில்நாட்டைக் குழிதோண்டல் புரிந்தும் (சுமைதாங்கி)

பட்டகடன் பெருந்திட்டக் கொடியாய்—உயர்
பறக்கவிட்டு சிறக்கலாமோ வடக்கு?
குட்டிபோடும் வட்டிப்பணம் கட்டவே—வரி
கோடிகோடி கொடுக்கலாமோ தெற்கு? (சுமைதாங்கி)

முடிப்பு:

சுமக்காது சுமந்திட்ட புகழ்மீண்டும் மீட்டிடுவாய்;—உன்
துயர்நீங்கத் திராவிடத்தின் சுதந்திரத்தைக் கேட்டிடுவாய்!

ஒண்டொடி கண்ணே உள

[நா. நாராயணன்]

அவள் ஆடாத தோகை; சூடாத சூதம், தழையாத வஞ்சி, குளிராத திங்கள், இறக்காத தேறல், குழவி இயங்காத் தண் கா.

அவள் அவன் உள்ளம் கவர்ந்தவள். உணர்வு தந்தவள். உடைமை கொண்டவள்.

அழைக்கிறாள் அவனை.

காதல் தந்தவளின் [illegible]வுங்க்க ஓடி வருகிறான் அவன்.

அவள் சீவிக் கொண்டையிட்டுச் செந்தூரப் பொட்டமைத்துத் தன் ஆவி கவர்ந்தவனின் வரவை எதிர் நோக்கி யிருக்கிறாள்.

விரும்பியவன் வருகிறான் விரும்பியதைக் கொடுக்க.

"தோள் கண்டார் தோளே கண்டார்; தாள் கண்டார் தாளே கண்டார்" என்பர் கவிஞர். இங்கு "அவள்" கண்டான், அவளையே கண்டான்.

கண்கள் இமைக்கவில்லை; ஒரே கனவு மயக்கம்.

எதிரே முழுமை பெற்ற ஓவியம் உயிர்பெற்று நிற்கிறது.

எள்ளுப்பூ நாசி; முல்லையன்ன பற்கள்; இல்லை யென்னும்போல் தோன்றும் துடியிடை; கயற் கண்கள்; விற் புருவம்; குன்றிச் சிவந்த கொவ்வை இதழ்; இளமென் துடை; ஏறு நடை; பீடு தோற்றம்.

எப்படிக் கண்கள் இமைக்கும்? இத்தனையையும் கண்ட அவை நிலை குத்தி நிற்கின்றன; களிப்பால் மலர்கின்றன. இன்னும் இன்னும் விரிகின்றன.

முழு அழகையும் பருகித் தீர்க்கும் ஆவல.

பசிகொண்ட அவன் கண்கள் அவள் எழிலைப் பருகிப் பருகி பசியாறுகின்றன. ஒருவாறு தன்னிலையடைந்த அவன் தன எண்ணத்தைச் செயலாக்க அவளை நெருங்குகிறான்.

அவளா அதற்கு இனங்குபவள்?

தமிழ்க் கவிகள் பாடும் ஊடலைச் செயல்முறையில் கண்டவள் ஆயிற்றே?

"கண்ணாளா" என்கிறாள். "என்னானேன்" என்கிறான் அவன்.

"என்னையாளவேண்டிய தாங்கள் இப்போது என்னால் ஆளப்படவேண்டியதுதானே?" என்கிறாள்.

பெண்களின் அன்பிற்குத் தோற்பதைப் பெருமையாக நினைப்பவனாயிற்றே? ஊடலிலே தோற்பதை வெற்றியாகக் காண்கிறான்.

"நானே நீயாக இருக்கையில் 'ஆளப்போவது யார்? ஆளப்படுவது யார்?' என்பதே கேள்வி அல்லவே" என்று கேட்டு அவளை மடக்குகிறான்.

நெயக்கலவி மயக்கத்தே நிகழ்ந்த மொழியைக் கிளி உரைப்ப. அதன் வாயைப் புதைத்த மட நல்லாள் அவள் தோழிதான். இருந்தாலும் அக்களவு மயக்கத்திலே காதல் மொழிகள் வரம்புகடந்து விளையாடுகின்றன.

"செவிக் குணவு இல்லாதபோது தானே வயிற்றுக்கு ஈயவேண்டும்?"

காதல் வெறியிலே அவள் உதிர்த்த சொற்கள் அவனுக்குக் கற்கண்டாய் இனிக்கின்றன. அவர்கள் இருவரின் சொல்லோட்டத்திலேயே ஒரு இன்ப இலக்கியமே பிறக்கிறது.

செவிக்குக் கிடைத்த இன்பத்திலே மாந்தித்திளைத்த அவன், உமிழ் ஊறும் தன் வாய்க்கும் விருந்துகாண விழைகிறான்.

அவளா தயங்குபவள்?

கள் ஊறும் சொல் உதிர்த்த வாயால் அவன் இதழ்களை ஒட்டி ஒட்டி இன்பமளிக்கிறாள். பழுத்த மாங்கனியைச் சுவைப்பதுபோல அமுதூறும் இவள் இதழ்களை நெடிதுறிஞ்சிச் சுவைக்கிறான் அவன்.

"பாலோடு தேன் கலந்தது அல்லவா
பனிமொழியாள்
வாய் எயிறு ஊறிய நீர்."

இயற்கையிலேயே நறுமணம் கமழும் அவள் கூந்தல். ஆனால் இப்போது செயற்கை மணங்களும் சேர்ந்துகொள்ளுகின்றன. அப்பொழுதே பறித்த முல்லையும் மல்லியும், அவள் நீண்ட கருங்குழலைச் சேர்ந்ததால் இன்னும் மணம் பெறுகின்றன.

இயற்கை மணமும், செயற்கை மணமும் நுகர்ந்து இன்பமடைகிறான்.

முதலிலே கண்டான்; கண்கள் பெறற பயனை அடைந்தான்; பின்னர் கேட்டான்; கேட்டதனால் கிறுகிறுத்தான். அப்புறம் உண்டான்; அதனால் உணர்விழந்தான். இப்பொழுது நுகர்ந்தான்; நறு நாற்றம் அவன் மயக்கத்தைப் போக்கியது.

வந்த செயலை மறந்தா இவ்வளவு நேரம் இருந்தான்? இல்லையில்லை. அவன் நடத்தவேண்டிய போருக்கு ஒரு முன் வாயிலாக அமைந்தது இவ் வூடல்.

கண், காது, வாய், மூக்குக்கு விருந்தளித்த, அவள் மெய்யாகிய அவன் உடலுக்கு விருந்தளிக்க வேண்டாமோ? அதற்கும் அக் காதற் கிழத்தி தயங்கினாள் அல்லள்.

தொட்ட தொட்ட இடமெல்லாம் இன்ப உணர்ச்சியூட்டும் தன் உடலையே அவனுக்கு விருந்தாக்குகிறாள்.

தந்தத்தால் கடைந்தெடுக்கப் பட்ட சிலைபோன்ற அவளைக் கட்டி, அணைத்து, கசக்கி, மெய்யோடு மெய்தீண்ட, கையோடு கை இறுக, உணர்வோடு உணர்வு இணைய, அவன் இருக்கும் நிலைகண்டு காற்றுக்கூட அவர்கள் இருவருக்கும் இடையே புக அஞ்சுகிறது.

ஆகா! இப்பொழுது அவன் அனுபவிக்கும் இன்பம் அமிழ்தினும் இனிது; கடலினும் பெரிது. அவன் மெய்பெற்ற விருந்து பிறரால் பெறற்கரியது. ஆனாலும் அது அவனுக்கே உரியது.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து
ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளதி

—குறள்

மெய், வாய், கண், மூக்குச் செவி ஆகிய ஐம்புலன்கட்கும் விருந்தூட்டி மகிழ்வித்த அவள் அவனுக்கு இன்பத்தின் எல்லையையே காட்டிவிட்டாள். ○

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (3—6—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 4

எது அவலட்சணம்?

அண்மையில் தமிழகம் வந்து திரும்பிய குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டினன் அவர்கள் இங்குள்ள மக்களுக்கு நல்லதொரு அறிவுரையை வழங்கிச் சென்றுள்ளார்.

காலத்திற்கேற்பப் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளுதல் வேண்டுமென்று வழக்கமாகவே தலைவர்கள் நிலையிலுள்ளவர்கள் பேசிவிட்டுப் போவது நாம் அவ்வப்போது காணும் காட்சிகளில் ஒன்றாகும்.

மூடப் பழக்கவழக்கங்களை உடனே முறியடிக்க வேண்டுமென்று பேசுபவர்கள், மூடப் பழக்கவழக்கங்கள் இவையிவை என்று சுட்டிக்காட்டி விளக்கமளித்துப் பேசுவது கிடையாது.

வறிதே, மூடப் பழக்கவழக்கங்கள் ஒழிய வேண்டும்—ஒழித்தாக வேண்டும் — அப்போதுதான் சமுகம் முன்னேறும் என்று முழக்கமிட்டுவிட்டு வெற்றிக் களிப்பு நடமாட விடை பெற்றுக்கொண்டு போய் விடுவார்.

ஆனால், அவருடைய அறிவுரையைச் செவி மடுத்த மக்கள் ஒழியவேண்டிய—ஒழிக்கப்படவேண்டிய மூடப் பழக்கவழக்கங்கள் என்று சொல்லிவிட்டுப் போனாரே, அவை எவை என்று புரியாமல் விழிப்பர்.

இந்த முறையில்தான் குடிரசுத் தலைவரின் அறிவுரையும் அமைந்துவிட்டதோ என்று ஐயுறவேண்டி இருக்கிறது. காரணம்,

> "சமுகத்துக்கு அவலட்சணமாக இருக்கும் அனாவசிய பழக்கங்களை கூடிய சீக்கிரம் ஒழித்துக் கட்டிச் சமுகத்தைச் சீர்படுத்த நாம் பெருமுயற்சி செய்தாக வேண்டும்.

என்று பேசியிருக்கிறார்.

சமுகத்துக்கு அவலட்சணமாக இருக்கும் பழக்கங்கள். அனாவசியமான பழக்கவழக்கங்கள். கூடிய விரைவில் ஒழித்துக்கட்டவேண்டும்.

இவைகளை ஒழிக்கப் **பெருமுயற்சி** எடுத்தாக வேண்டும்.

இவை அவருடைய அறிவுரையில் பொதிந்துள்ள சுவைமிக்க கருத்துக்கள்.

காலத்தில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. என்றாலும் நம்முடைய கருத்தில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லையே என்ற தமது வருத்தத்தைத் தெரிவித்த குடியரசுத் தலைவர் அவர்கள்,

தம்முடைய அறிவுரையை முற்றிலும் மாற்றி மக்களை வேறு திசைக்குத் திருப்பியுள்ளார்.

> புராணங்களைப் புரட்டுங்கள்.
>
> சிவசக்தி உருவகத்தைக் கவனியுங்கள்.
>
> பசுபதிநாதரைப் பாருங்கள்.

இவை எவ்வளவு இலட்சணமாக இருக்கின்றன பார்த்தீர்களா? என்று கேட்கிறார்.

சமுக அவலட்சணங்களை ஒழிக்கவேண்டுமென்று வற்புறுத்திய டாக்டர் இராதாக்கிருட்டினன் அவர்கள், கடவுளரின் அவலட்சணங்களை மக்கள்முன் எடுத்துக் காட்டிச் சமுக அவலட்சணங்களை ஒழிக்கப் பெரு முயற்சி எடுக்கும்படி அறிவுரை நிகழ்த்துகிறார்.

எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்பக் காரண காரியங்களை எடுத்துக்காட்டி விளக்கவேண்டிய நிலையிலுள்ள ஒரு பொறுப்புள்ள தலைவர், சமுக அவலட்சண ஒழிப்பிலிருந்து இந்திய ஒற்றுமைக்கு வந்து, அதனைப் பாது காக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்கிறார்.

சிவசக்தி உருவகத்தையும் பசுபதி நாதரையும் மேற்கோளாக எடுத்துக்காட்டிப் பார்த்தீர்களா ஒற்றுமையின் உயர்வை என்று உபதேசம் புரிகிறார்.

டாக்டர் இராதாக்கிருட்டினன் அவர்கள் தம்மை ஒரு அரசியல்வாதி என்று சொல்லிக்கொள்வதை விடத் தாம் ஒரு வேதாந்தி என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுபவர்.

என்றபோதிலும் காலம் எவ்வளவு மாறினாலும், கருத்தில் மாற்றம் ஏற்படவில்லையே என்று கூறியவரே, தம்முடைய கருத்தைக் காலத்துக்கேற்ப மாற்றிக் கொள்ள முடியாமல் அவலட்சணங்களுக்குப் பிறப்பிடமான புராண காலத்துக்கு மக்களைத் திருப்பிவிடுகிறார்.

எனவேதான், அவலட்சணமான பழக்கவழக்கங்கள் எவை? இலட்சணமான பழக்கவழக்கங்கள் எவை என்பதை உயர்நிலையிலுள்ள டாக்டர் இராதாக்கிருட்டினன் அவர்கள் போன்றோர் இங்கொருகாலும் அங்கொரு காலுமாக நில்லாமல் தெளிவான கருத்தை மக்கள் மனதில் பதியவைத்துச் சமுக அவலட்சணங்களைப் போக்க வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

❋

ஜூடித் மின்ட் சென்தி

—(கனகு)—

சென்ற இதழ் தொடர்ச்சி...

யாரும் அறியக்கூடாது

நானே அவனைத் தாண்டி நடந்து கொண்டேயிருக்கவேண்டியுள்ளது. அவன் நண்பர்களைத் தாண்டிச் சென்றுகொண்டேயிருக்க வேண்டியுள்ளது. கண்களை அப்பால் திருப்பக்கூட வழியில்லையே! வாய்ப்பில்லையே! நான் அங்கிருப்பதை யாரும் அறிந்துகொண்டுவிடக் கூடாது. அதுவும் என் மகனைப் புதிதாக யாரோ வந்து பார்த்ததாகச் செய்தி பரவிவிடக் கூடாது.

என் மாமி வீட்டுக் கதவை மெல்லத் தட்டினேன் நான். அவள் திறந்தாள். என்னை ஏறிட்டுப் பார்த்தாள். உற்று நோக்கினாள். தன்னை மறந்த, நிலையிறந்த வியப்பு நோக்கோடு என்னைப் பார்த்துக்கொண்டே நின்றாள். சட்டென்று முரட்டுத் தனமாக அவளைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தேன் நான். கதவை மூடிவிட்டேன்.

பின்னர் நாங்கள் அழுதோம், அழுதோம்! ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுது கொண்டேயிருந்தோம்.

நான் அழுகையினின்று ஓய்ந்த போது "டாம்மியை உள்ளே அழையுங்கள் விரைந்து" என்றேன்.

அவள் அவனை அழைத்துவர வெளியே சென்றாள். அப்போது என் மனம் அடித்துக்கொண்டது. அவன் என்னை அறிந்துகொள்ளாவிட்டால் என்ன செய்வது?

திடீரென்று அவன் என் எதிரில் வந்து நின்றான் தன்னுடைய பாட்டியோடு. பாட்டி கேட்டாள், "இது யார் என்று உனக்குத் தெரிகிறதா?"

அவன் குரலில் என்னவோ நம்பிக்கையின்மை ஒலிக்கத்தான் செய்தது. எனினும் அவன் தயங்கவில்லை "இது அம்மா,.....எங்க அம்மா!"

பிறகு அவன் என்னைக் கட்டிக் கொண்டான். என் முகம் எல்லாம் முத்தமிட்டான். சின்னஞ்சிறு மதலையாக விட்டுச்சென்ற அந்த என் மகன் வளர்ந்து நின்றான் என் எதிரில். நான் அவன் தலைமுடியைக் கோதிவிட்டுக்கொண்டே நின்றேன்.

அந்தக் கணமே புது வலிவுபெற்ற வளானேன் நான். அந்த வலிவு எப்படிப்பட்ட கொடுமையையும் எதிர்த்துச் செல்லும் திறன் பெற்றது. அந்த வலிவு எவ்வளவு பெரிய துன்பக் குடாவையும், அதிலேஉலவுகின்ற மாபெரும் துயரச் சூறாவையும் தாண்டிக் கடந்து உரிமை நிலத்தைக் கண்டுகொள்ளும், எய்திவிடும் ஆற்றல் படைத்தது. அந்த வலிவோடுகூட மேலும் பல வழிகளும் அங்கே தென்பட்டன.

நான் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் அங்கேரிய அகதிகளை அணுகியதும், அவர்களிடமிருந்து அடையாளச் சீட்டுகள் பெற முயன்றதும் ஏற்கனவே நிகழ்ந்தவை. ஒருமுறை ரஷ்யப் படைஞரிடம் சிக்கிக் கொண்டு எப்படியோ நல்லவேளையாக மீண்டு வந்துவிட்டேன்.

இப்போது நான் வழிகாட்டுவதையே தொழிலாகக் கொண்டோரைத் தேடிப்பிடிக்க வேண்டியதாயிற்று. அவர்களால்தான் எல்லையைத் தாண்டி எங்களை அழைத்துச் செல்ல முடியும். அங்கேரியப் புரட்சிக்குப் பிறகு இப்படிப்பட்ட முயற்சிகள் உயிருக்குத் துணிந்து முயலும் முயற்சிகளாகவே இருந்தன. அதிலிருந்து பெறப்படும், அல்லது அதற்காகக் கொடுக்கப்படும் பொருளின் அளவைப் பற்றி யாரும் கவலை கொள்வதில்லை.

மறுநாள் அந்த நகரையே வலை போட்டு, நண்பர்களிடம் எல்லாம் வேண்டுகோள் விடுத்துப் பார்த்தேன் — யாரிடமிருந்தாவது உதவி கிடைக்குமென்ற எண்ணத்தோடு. எல்லாரும் எனக்கு உதவத்தான் விரும்பினார்கள், ஆனால் எவராலும் அது முடியக்கூடியதாயில்லை. எல்லைப்புறமெங்கும் வலுவான காவல் போடப்பட்டிருந்தது. சோவியத்காரரின் அந்த இருப்பு முள் வலையை எவராலும் பிரித்துக் கொண்டு தப்பிவிட முடியாது.

துன்ப வெளி

நாளும், நாளும் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கான வழிவகைகளைத் தேடிக்கொண்டேயிருந்தேன். இடையில் எந்த நிமிடம் சிறைபிடிக்கப்படுவேனோ என்ற அச்சத்தையும் சுமந்துகொண்டே திரிந்தேன்.

ஒருநாள் இரவு மிகவும் களைத்துப் போய், நம்பிக்கையிழந்துபோய் வீட்டுக்குத் திரும்பிவந்தேன். அவ்வேளை என் அண்டைவீட்டுக்காரியான திருமதி போத் என்பாள் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். அவள் வீடு என் மாமியாரின் வீட்டுக்குச் சற்றே தொலைவில்தான் இருந்தது.

"இரண்டு காவல் ஊழியர்கள் உன்னைத்தேடிக்கொண்டு திரிகிறார்கள்" என்றாள் அவள் என்னிடம். அப்போது நான் பிடிக்கப்பட்டுவிட்டதாகவே முடிவு கட்டினேன். நான் உதவியற்ற நிலையிலிருப்பதாக எண்ணி ஏங்கினேன். "நீ என் வீட்டில் வந்து ஓரிரவு தங்கியிரு" என்று பின்னும் அவள் சொன்னாள்.

"உங்கள் நிலை என்னவது? உங்களையும் சேர்த்தல்லவா பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள்!" என்றேன் நான்.

அவள் சிரித்துக்கொண்டு சொன்னாள். "நீ சுவிட்சர்லாந்திலிருந்து எனக்கு மருந்துகள் அனுப்பியிராவிட்டால், இப்போது என் உடல் இருக்காது, உன் உயிர் இருக்காது. நான் எதிரிகளால் பிடிக்கப்பட்டுச்

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

3—6—'62.

தம்பி!

விமானம் சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு ஒரு எண்ணம், நாட்டுப் பிரிவினை கேட்பவன் என்ற காரணம் காட்டி, என்னைத் தில்லியில் வெறுப்புடன் அனைவரும் நடத்துவார்களோ என்னவோ என்று. கனல்கக்கும் பார்வை, கடுகடுப்பான பேச்சு, ஆணவம் நெளியும் போக்கு, இவைகளால் என்னைத் தாக்குவார்கள் என்று எண்ணிக்கொண்டு, அத்தகைய நிலைக்கு உட்பட என்னை நான் தயாராக்கிக் கொண்டேன்.

தில்லி மக்கள் சபையில் ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர் உள்ளனர்—நமது கழகத்தவர், எழுவர்.

தில்லி இராஜ்யசபையில் இருநூற்று அறுபதுக்கு மேற்பட்டவர் உறுப்பினர்—கழகத்துக்காக நான் ஒருவன்.

எதையேனும் நான் அந்த அவையில் கொண்டு சென்றால், ஆதரிக்கிறேன் என்றுகூற, துணைத்தோழர், கழகத்தவர் இல்லை.

மிகப்பெரிய எண்ணிக்கை வலிவுள்ள கட்சி அரணளிக்க அமர்ந்துகொண்டு ஆணவம்கக்கும் 'மாவீரர்கள்' விரல்விட்டு எண்ணத்தக்க எண்ணிக்கையுள்ள முகாமில் இருக்க நேரிட்டால், எத்துணை வீரமும் நெஞ்சுரமும் காட்டுவர் என்பது எனக்குத் தெரியும்—நெருங்கிப்பழகி அவர்களின் இயல்பினை மிகநன்றாக அறிந்திருக்கிறேன்.

"நாங்களென்ன விவரமறியாதவர்களா, வம்பிலே போய் மாட்டிக்கொள்ள. குறைவான எண்ணிக்கையுள்ளதாக ஒரு கட்சி இருக்கும்போது, பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலே ஒரு கட்சி நிற்கும்போது, எப்புறமிருந்தும ஏசலும் தூற்றலும், தாக்குதலும் கிளம்பி வந்து மேலே வீழ்கிறபோது, நாங்கள் ஏன், அந்த இடர்ப்பாடுமிக்க இடத்தில் இருக்கப்போகிறோம் என்று பேசுவார்கள் — புத்திசாலிகள் அவர்கள் — கீழே வீழ்ந்த பழத்தைப் பொறுக்கி எடுத்து, மண்ணை நீக்கி வாயில் போட்டுக் குதப்பிச் சுவை பெறுபவர்கள்—அல்லது, வளையில் பதுங்கிக்கொண்டிருந்துவிட்டு, ஆள் அரவம் இல்லா வேளை பார்த்து வெளியே வந்து முற்றிய கதிரைக் கடித்துத் தின்னும் காட்டெலிகள்—புரிகிறது.

தம்பி! நமது கழகத்திலே இன்று இடம் பெற்றுப் பணியாற்றுவது, பெருங்காற்றடித்து மரங்கள் வேருடன் கீழே வீழும் வேளையில், இருட்டாகிப் போனதன் காரணமாகத் தொலைவிலே காணப்படுவது கற்குவியலா காட்டு எருமையா என்று சரியாகத் தெரியாத நிலையில், பேய்க்காற்றடிப்பதால், கிளம்பிடும் ஓசை, காற்றொலியா அல்லது

சூடும் சுவையும்

[2]

காட்டுமிருகத்தின் உறுமலா என்று விளங்காத நிலையில், தனியனுக ஒருவன், மூலிகை தேடிச்செல்வதற்கு ஒப்பாகும்.

இன்று காங்கிரஸ் கட்சியில் இடம்பெற்று, இன்பம் பெற்று, இறுமாந்துகிடப்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுக்குமேல், அக்கட்சி, கடும் போரினை முடித்துக்கொண்டு காடு கடந்து நாடு ஆளும் நிலைபெற்ற பிறகு, வந்து புகுந்தவர்கள். புகுந்த இடத்துக்கு உள்ள வனப்பும் வலிவும் கண்டதால் ஏற்பட்ட உணர்ச்சி, அவர்களின் கூனினை நிமிர்த்திற்று, குளறலைக் கர்ஜனையாக்கிற்று, வீரம் பேசுகிருர்கள்!!

காங்கிரஸ் கட்சி காடுமேடு சுற்றிக் கருக்கலில் சிக்கி, கண்டவர்களால் தாக்கப்பட்டு வடுபல கொண்டதாக இருந்த நாட்களிலே இவர்கள், வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசிக்கொண்டிருந்தவர்கள்.

நடக்கிற காரியமா இதெல்லாம்.

பைத்யக்காரத்தனமான போக்கு.

சுட்டால் சுருண்டு கீழே வீழ்வார்கள், பிணமாக!

தடி தூக்கினல், தலைதெறிக்க ஓடுவார்கள்.

வெள்ளைக்காரன் விட்டுவிட்டுப் போவதற்கா, இவ்வளவு கோட்டைகளைக் கட்டிக் கொடிமரத்தை நாட்டி, கொலுமண்டபம் அமைத்துக்கொண்டிருக்கிருன்!

அவனவனுக்குத் தகுந்த வேலையைச் செய்துகொண்டு, வயிற்றைக்கழுவிக் கொண்டு காலத்தைக் கடத்துவதை விட்டுவிட்டு, வந்தேமாதரமாம் சுயராஜ்யமாம், வறட்டுக்கூச்சல் போட்டுக் கெட்டுத் தொலைகிருர்கள்.

எத்தனை நாளைக்கு இந்தக் கூச்சல்? வெள்ளைக்காரன், போனுல் போகட்டும் என்று சும்மா இருக்கிறவரையில். முறைத்துப் பார்த்தானுனல், இதுகள் பயத்தால் வெடவெடத்துப் போய்விடுமே.

இவ்விதமாகவெல்லாம் திண்ணைப்பேச்சு நடத்திக் கொண்டிருந்தவர்களெல்லாம், காங்கிரஸ் நாடாளும் கட்சியான உடனே அதிலே நுழைந்துகொண்டு, திலகருக்குத் தோழர்களாக இருந்தவர்கள் போலவும், சபர்மதி ஆசிரமத்துக்கு அடித்தளம் நாட்டியவர்கள் போலவும், லாலா லஜபதிராய் பாஞ்சாலத்தில் துப்பாக்கியை எதிர்த்து நின்றபோது பக்கத்தில் இருந்து அவருக்குத் தைரியம் கூறியவர்கள் போலவும், சிதம்பரனுர் செக்கிழுத்தபோது சிறையிலே இக்கொடுமையை எதிர்த்துப் புரட்சி நடாத்தி அந்தமான் துரத்தப்பட்டவர்கள் போலவும், கொடி காத்த குமரனுக்கு வீரத்தை ஊட்டிய ஆசான்கள் போலவும், தில்லையாடி வள்ளியம்மைக்குத் 'தேச பக்தி' பாடத்தைக் கற்றுக்கொடுத்தவர்கள் போலவும், அல்லவா தேசியம்—காந்தியம்—பாரதியம் பேசுகிருர்கள். பேசுவதுகூட அல்ல தம்பி! காங்கிரசின் போக்கைக் கண்டிப்பவர்களைக்கண்டால், அடே அப்பா, இவர்களுக்குக் கொப்பளிக்கும் கோபமும், பீறிட்டு எழும் வீராவேசமும், பொங்கிடும் நாராசமும் கண்டால், கைகொட்டிச் சிரிக்கத்தான் தோன்றுகிறது. எவனே கஷ்டப்பட்டுக் கடும்போரிட்டு, ஆபத்துகளில் சிக்கி அடவியில் உலவிக் கிடந்த புலியை அடித்துக்கொன்ற பிறகு, எப்படியோ, அந்த புலித்தோலின்மீது அமர்ந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன் காரணமாகவே ஊரை மிரட்டுகிருனே போலிச் சாது, அதுபோலல்லவா இருக்கிறது இன்று, காங்கிரசில் புதுந்துகொண்டு வீராவேசம் பேசும் பெரும்பாலோரின் போக்கு.

நமது நிலை, தம்பி! முற்றிலும் மாறுனது. ஆட்சி மன்றங்களில் எண்ணிக்கை பலம் எனும் அரணைத் துணைகொண்டு நாம் இல்லை. நமது கழகம், நாடாளும் நிலையில் உள்ளது அல்ல. காடுமேல் என்று கூறத்தக்க விதமான போக்குடையோர் பலர் தாக்கிடும் நிலையில், உள்ளது நம் கழகம். ஐந்நூறு பேர்களுக்கு இடையிலே ஏழு! இருநூற்று அறுபது பேர்களுக்கு இடையிலே ஒருவன்!—என்ற எண்ணிக்கை நிலையை மட்டுமல்ல, நான் குறிப்பிடுவது. பலருக்கு, இந்த நிலை ஒன்று போதும், பேச்சடைத்துப் போகும், கண்களிலே மிரட்சி ஏற்படும், கைகால் நடுக்குறும். எண்ணிக்கை நிலையுடன் வேறென்றும் இருக்கிறது. காங்கிரசிலே உண்மையான தொண்டாற்றியவர்கள் இன்று அங்கு அதிகம் இல்லை. உண்மையாக, விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, எதிர்ப்புகளைத் தாங்கியவர்களுக்கு, வேறோர் விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடுவோரிடம், தம்மையும் அறியாமல் மதிப்பு ஏற்படும். இன்று காங்கிரசில் உள்ளவர்களிலே பெரும்பாலோருக்கு, விடுதலைக் கிளர்ச்சியில் பங்கேற்ற அனுபவம் கிடையாது — ஆகவே அவர்களுக்கு நாம் நடாத்தும் விடுதலைக் கிளர்ச்சியினை மதிப்பிடத் தெரியவில்லை. தெரியாததால், திக்குக்கு ஒருவர் கிளம்பித் தீப்பொறி கிளப்புகிருர்கள்.

இந்தத் திங்கள் நான் வேதாரண்யம் சென்றிருந்தேன்—காங்கிரஸ்காரர்கள் நினைவிலே வைத்துக்கொண்டிருக்கிருர்களோ இல்லையோ, நானறியேன் — எனக்கு அங்கு சென்றதும், மறைந்த சர்தார் வேதரத்தினம்

அவர்களின் நினைவு வந்தது. சட்டசபையிலே நான், காங்கிரஸ் ஆட்சியின் போக்கைக் கண்டித்துப் பேசும் போது, அவருடைய முகம் அகநிலையைக் காட்டும்—கண்டிருக்கிறேன் — புதிதாகக் காங்கிரசில் சேர்ந்து கொண்டிருப்பவர்களின் முகத்தையும் நான் கவனித்திருக்கிறேன்.

பழைய, தொண்டாற்றிய, துயர் அனுபவித்த காங்கிரஸ்காரர்களின் முகத்திலே, கோபத்தைவிட ஒருவிதமான திகைப்புத்தான் அதிகம் காணப்படும்; பேச்சிலே வெறுப்பைவிட உருக்கம்தான் அதிகம் தெரியும்; போக்கிலே ஆணவத்தைவிட அணைத்துச் செல்லவேண்டுமே என்ற கவலைதான் அதிகம் இருந்திடும்.

காரணம் இருக்கிறது, இதற்கு. இவர்கள், கட்டிக் காத்தவர்கள் காங்கிரஸ் கட்சியை, கடும் போரிட்டவர்கள் வெள்ளையரை எதிர்த்து, தழும்புகள் பெற்றவர்கள் விடுதலைக் கிளர்ச்சியின்போது; தன்னலம் மறந்தவர்கள் தொண்டாற்றுகையில், இன்னல் பல கண்டு இறுதியில் வெற்றி ஈட்டியவர்கள்; எனவே அவர்களுக்கு, தமது வெற்றிச் சின்னமான காங்கிரஸ் ஆட்சி கண்டிக்கப்படும்போது திகைப்பு ஏற்படுகிறது; எப்படிப்பட்ட மகத்தான அமைப்பு காங்கிரஸ்; எப்படிப்பட்ட தியாகிகளும் தீரர்களும் இந்தக் காங்கிரசுக்காகத் தொண்டாற்றி இருக்கிறார்கள், அதனை எல்லாம் மறந்து இன்று காங்கிரசாட்சியைக் கண்டிக்கிறார்களே, எதிர்க்கிறார்களே, என்ன காலம் இது! ஈதென்ன போக்கு! உச்சிமேல் வைத்துப் போற்றி வந்தோம் காங்கிரசை; இன்று அதனை உலுத்தர்களுக்கு வாழ்வளிக்கும் கூடம் என்று கூறுகிறார்களே; ஏன் இன்று இவ்வளவு எதிர்ப்பு, காங்கிரசுக்கு ஏற்பட்டுவிட்டது என்று எண்ணித் திகைக்கிறார்கள்; வேண்டாமப்பா, காங்கிரசை நீ அறியமாட்டாய், அது வீரக் காப்பியம், தியாகப் பரம்பரை, கிளர்ச்சிக் கூடம், விடுதலைப் பேரணி, அதனைத் தாக்காதே தகர்த்திடாதே என்று உருக்கத்துடன் பேசுகின்றனர்; பெற்றவளுக்கே தெரியும் அந்தப்பிள்ளையின் அருமை என்பார்களே, அதுபோல.

வந்து நுழைந்துகொண்டதுகள் உள்ளனவே, இதுகளுக்கு, அந்தப் பழைய வரலாறே; தெரியாது, சரியாக! காடு சுற்றிக் கடும்போரிட்ட கட்டம் புரியாது. எனவே, திகைப்பும் உருக்கமும் எழாது; கோபம்தான் கிளம்பும். ஏன் தெரியுமோ, தம்பி! மலைபோல நம்பிக்கொண்டிருக்கிறோம் காங்கிரஸ் கட்சியை; மக்களைக் கட்டுப்படுத்தி வைத்திடத் தக்கதோர் கருவியாக இது கிடைத்திருக்கிறது; இதனை ஏணியாகக் கொண்டு உயர ஏறி உறியில் உள்ளதை வழித்தெடுத்துத் தின்னமுடிகிறது; இதனைப் போய் இந்தப் 'பாவிகள்' கெடுக்கப் பார்க்கிறார்களே, என்ற எண்ணம் தோன்றுகிறது, எரிச்சல் பிறக்கிறது, கோபம் பொங்குகிறது, கடுமொழி உமிழ்கிறார்கள்.

இன்று, ஆட்சிமன்றங்கள் பலவற்றிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வெற்றிபெற்று அமர்ந்திருப்பவர்களிலே பெரும்பாலோர், நான் குறிப்பிடும், இரண்டாவது வகையினர்! எரிச்சல்கொள்வோர். காங்கிரஸ் கவிழ்ந்துவிட்டால், தங்கள் 'காலம்' முடிந்துவிடும் என்ற அச்சம் அவர்களை ஆட்டிப்படைக்கிறது; அதனால் ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறது.

தம்பி! குதிரைமீது செல்பவனையும் காண்கிறாய்; பொய்க்கால் குதிரை ஆட்டக்காரனையும் காண்கிறாய். உண்மையான குதிரை அத்தனை ஆட்டமா ஆடுகிறது; அத்தனைவிதமாகவா தாவுகிறது, தாண்டுகிறது; வளைகிறது, நெளிகிறது, சுற்றுகிறது, சுழல்கிறது; இல்லையல்லவா?

இன்று காங்கிரசிலே பொய்க்கால் குதிரைகள் தான் அதிக அளவில்!! அதற்கேற்றபடியான 'ஆட்டம்' காண்கிறோம்.

இந்தப் 'புகுந்துகொண்டதுகள்' கக்கும் பகைதான் இன்று மிகப் பெரிய புகைச்சலைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

இந்நிலையில், நான் தில்லி சென்றதால், வெறுப்புடன் நடத்தப்படுவேன், அல்லது பேச வாய்ப்புப்பெற இயலா நிலை ஏற்பட்டுவிடும், என்றுதான் எண்ணிக் கொண்டேன்.

தில்லி, பாராளுமன்றத்தில் நான்கண்ட சூழ்நிலை, நான் எதிர்பார்த்தபடி இல்லை. பலரும், பரிவுடன் நடந்து கொண்டனர்.

"வாய்யா, வா, வா! தெரியுமா சமாசாரம்—ஹைதராபாத்திலே, ஒனக்குக்கொண்டாந்த மாலையை எல்லாம் ஒங்க ஆளுங்க என் கழுத்திலே போட்டாங்க—நீ வரலேன்னு சொன்னதும். ஆமாய்யா, நெறைய மாலைங்க......உங்க ஆளுங்க......" என்று முன்னாள் அமைச்சர் மாணிக்கவேலர் கூறினார் குழைவுடன். முன்னாள் அமைச்சர் அவனாசியார், ரொம்பச்சந்தோஷம் எனக்கு என்றார். முன்னாள் அமைச்சர் மாதவமேனன், என்ன அண்ணாதுரை, தெரியலையா என்னை என்று கேட்டு மகிழ்வித்தார். அமைச்சர் சுப்ரமணியம், இங்கு மேடைப்பேச்சின்போது, கட்சிக்காரர் மகிழ அடித்துப் பேசும் வக்கீலாகிறார், அங்கு என்னிடம் மெத்த அன்பாகத்தான் பேசினார், பழகினார். யார் அவன் பிரிவினை கேட்கிறவன்? அவன் 'மூஞ்சியைப் பார்க்கவேண்டுமே' என்று பண்டிதநேரு கேட்டார் என்று இங்கு பேசினாராம்—பத்திரிகையில் பார்த்தேன்; என்னால் நம்பமுடியவில்லை, அங்கு என்னிடம் அத்துணை பரிவுடன் பழகுபவர் இவரேதானா என்று! என்னைப்பற்றி, ஏளனமாகவும் இழிவாகவும் பேசினால்தான், தன் கட்சியில் 'சபாஷ்'பட்டம் கிடைக்கிறது என்பதால் அவ்விதம் பேசுகிறார் போலும்.

பேசி ஆசையைத் தீர்த்துக்கொள்ளட்டும். நான் ஏள னம் இழிமொழி கேட்டுத், துவண்டுவிடுபவனல்ல; அதி லும் பேசுபவர்கள் ஏன் அவ்விதம் பேசுகிருர்கள் என் பது நன்ருகப் புரிகிறபோது, எனக்கு வருத்தமோ கோபமோகூட எழாது.

"இவ்வளவு நேரம் இடி இடித்ததல்லவா!
இதோ இப்போது மழை பெய்கிறது"

என்று, தலையைத் துவட்டிக்கொண்டே கூறினாராம் சாக்ரடீஸ்.

நடந்தது என்ன தெரியுமா, தம்பி! ஒரு குடம் தண் ணீரை வேண்டுமென்றே சாக்ரடீசின் தலையில் கொட்டி ஞள். யார் அந்தத் தூர்த்தை? என்று கோபத்துடன் கேட்டுவிடாதே; உலகம் மெச்சும் வித்தகராம் சாக்ரடீ சின் தலையிலே வேண்டுமென்றே போக்கிரித்தனமாகத் தண்ணீரைக் கொட்டியவர் வேறுயாரும் அல்ல; அவ ருடைய மனைவி! ஆமாம்! அவ்வளவு நல்ல மாது!!

வழக்கப்படி, நண்பருடன் சாக்ரடீஸ், வீட்டு வாயற் படி அருகே நின்று பேசிக்கொண்டிருந்தார். பல பொருள்பற்றி, ஆழ்ந்த கருத்துகளை எளிய இனிய முறையிலே விளக்கியபடி. அவர் பேச்சைக் கேட்டு, நண்பர் சொக்கிப்போனர். உள்ளே ஒரே கூச்சல், குள றல், அலறல்! சாக்ரடீசின் மனைவி, இப்படி வேலை வெட்டி இல்லாமல், பொழுதை ஓட்டிக்கொண்டு, கண்ட வனிடம் கண்டதைப் பேசிக்கொண்டு கிடக்கிருரே, செ, இவரும் ஒரு மனிதரா! இவரைக் கட்டித்தொலைத்தார் களே என் தலையில்.—என்றெல்லாம், அர்ச்சனை செய் கிருர், உள்ளே இருந்தபடி உரத்த குரலில்.

நண்பன் இதுகேட்டுத் திகைக்கிருன்.

சாக்ரடீசுக்கும், பேச்சுக்காதில்விழுகிறது; நண்பன் திகைப்பதும் புரிகிறது. ஆனல் ஒரு துளியும் பரபரப்பு அடையவில்லை, கோபம் எழவில்லை, பேச்சின் போக்குக் கூட மாறவில்லை. மனைவியின் தூற்றலைப் பொருட்படுத் தாமல் பேசிக்கொண்டே இருக்கிருர். — உரத்தகுரலில் —இடி இடிப்பதுபோல.

எவ்வளவு திட்டினுலும் பொருட்படுத்தவில்லையே என்ற ஆத்திரம், அம்மைக்கு. குடம் நிறையத் தண் ணீர் எடுத்து, உள்ளே இருந்து சரேலென வெளியே வந்து, சாக்ரடீசின் தலையிலே கொட்டிவிட்டுச் சென் ருள், தன் ஆத்திரத்தைக் காட்ட. நண்பன் திடுக் கிட்டுப்போனுன். அப்போதுதான் சாக்ரடீஸ் சொன் ஞர்,

இவ்வளவு நேரம் இடி இடித்தது; இப்போது
மழை பெய்கிறது.

என்று. சாக்ரடீசுக்கு வந்து வாய்த்தவள் அப்படி. அதற் காக, அவர் தமது அறிவுப் பிரசாரப் பணியை நிறுத்தி விட்டு, அம்மையை நல்வழிப்படுத்தும் காரியத்தைக் கவனித்துவிட்டுப் பிறகு, மற்றக்காரியம் என்று இருந்து விட்டாரா? அல்லது நாடே கொண்டாடும்நிலை நமக்கு; நம்மை இவ்விதமாக நடத்துபவளை நையப்புடைத்திட வேண்டாமா என்று கோபப்பட்டாரா? இல்லை!

"நம்மிடம் உலகுஎதிர்பார்ப்பது, அறிவுப்
பணி. அதனை நாம் நடத்திச் செல்வோம்"

என்று இருந்துவந்தார்.

நாடும் உலகும் அவருடைய நற்பணிக்கு மதிப் பளித்ததேயன்றி, அவருடைய துணைவியாக வந்துற்ற வளின் பேச்சைக் கேட்டு அவரை மதிப்பிடவில்லை.

பொதுப்பணியாற்றிடுவோருக்கு இந்த மனப்பக்கு வம் ஏற்படவேண்டும். அதனை நான் மிக முக்கிய மானதாகக் கருதுகிறேன். நாம் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டிய, பழுதுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய, கருவூலம் இது.

வள்ளுவர், கடுமொழி பேசுவோரை மட்டுமல்ல, கேடு செய்பவர்களைக்கூடப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ருர்; சகித்துக்கொள்வது மட்டுமல்ல, அவர்களே வெட்கித் தலைகுனியும்படி நாம் நடந்து கொள்ள வேண்டும் என்ருர்

இன்ன செய்தாரை ஒறுத்தல்
அவர் நாண நன்னயம் செய்துவிடல்

என்பது திருக்குறள். நான் கூடுமான வரையில், அந் நன்னெறியிற் செல்ல முயல்கிறேன்.

தமது கட்சிக்காரர் கைதட்டி மகிழவேண்டும் என் பதற்காக என்னைப்பற்றி இழிவாக அமைச்சர் சுப்ர மணியம் போன்ருர் பேசினுல், எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, அவர்களிடம் காணக்கிடக்கும் சிறப்பு இயல்புகளைப் பாராட்ட நான் தவறமாட்டேன். பகை உணர்ச்சியை வருவித்துக்கொண்டு, பண்பு இழந்துவிட நான் ஒருப்படமாட்டேன். அமைச்சர் சுப்ரமணியம், தமது கட்சிக்காரர் மனமகிழ, தரக்குறைவுமிக்க பேச்சுப் பேசியதால், நான் கோபமுற்று, அவர் அன்று, நான் இராஜ்யசபைக்குள்ளே நுழைந்தபோது, முன் வரிசையில் உட்கார்ந்திருந்தவர் எழுந்துவந்து கை குலுக்கி வரவேற்று, 'பண்பு' காட்டினுரே, அதனை மறந்துவிட முடியுமா!

அவரால் அப்படியும் நடந்துகொள்ள முடிகிறது; இப்படியும் பேச வருகிறது என்றுதான் எண்ணிக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல! அப்படிப் பண்புடன் நடந்துகொள் பவரைக் கட்சி நிலைமை, இப்படியும் பேசவைக்கிறது என்று எண்ணிக் கழிவிரக்கப்படுகிறேன். அவருடைய கட்சிக்காரர் களிடையே அவர் இன்று ஓர் 'சந்தேகத்துக்குரியவர்!'

அவருடைய பத்தினித்தனம் சந்தேகிக்கப்படுகிறது. காமராஜரைவிட்டு நெடுந்தூரம் பிரிந்து சென்றுவிட்டார்,—தில்லிக்கும் சென்னைக்கும் இடையே உள்ள தொலைவை மட்டும் நான் குறிப்பிடவில்லை; நேருவுக்கு மிக நெருங்கியவராகிவிட்டார்!

தில்லியில் பெறவேண்டியவைகளை இனிக் காமராஜர், சுப்ரமணியத்தின் தயவால்தான் பெறவேண்டும் என்ற நிலை, இன்று.

இது, காமராஜருக்குச் சுவையூட்டும் நிலை அல்ல.

தில்லியில் இருந்துகொண்டு தமிழக அரசியலில் தமக்குள்ள இடத்தையும் இழந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, அமைச்சர் சுப்ரமணியம், காமராஜருக்கு எதிர்ப்புக்குழு உருவாக, ஊக்கமூட்டினார் என்று வதந்தி பலமாக இருக்கிறது.

அங்கே இருந்துகொண்டு என்ன செய்ய முடியும்?

என்று காமராசர் ஆதரவாளர்களும்

அங்கே போய்விட்டால் என்ன? அவருக்காக இங்கு நாங்கள் இருக்கிறோம்.

என்று சுப்ரமணியத்தின் ஆதரவாளர்களும், மிகத் தாராளமாகப் பேசிக்கொள்கிறார்களாம்.

கருத்து வேற்றுமைகள் எழுந்தன; பேசப்பட்டன; ஆனால் பிளவு இல்லை —என்று சுப்ரமணியம் கூறுகிறார்.

இந்த அளவு கூறும் துணிச்சல் இவருக்கு ஏற்பட்டதற்குக் காரணமே, தில்லியில் பெரிய வேலை கிடைத்தது தானே!!—என்று காமராசர் ஆதரவாளர் பேசிக்கொள்கின்றனர்.

இந்த 'வாடை' வீசும் நோக்கில், இங்கு வந்த அமைச்சர் சுப்ரமணியம், என்னைத் தாக்கிப் பேசுவதன் மூலம் தனது அறிவாற்றலை, வீரதீரத்தை, மட்டுமல்ல, தமது (கட்சி) பத்தினித்தனத்தை மெய்ப்பித்துக்காட்ட ஒரு வாய்ப்புத் தேடிக்கொண்டார் போலும்.

அண்ணாத்துரைக்குத் தைரியம் கிடையாது

என்று அமைச்சர் கூறினாராம்.

அதனால்தான் பேசிவிட்டு ஓடிவந்துவிட்டான்

என்று செப்பினராம்.

இரயிலில் போனால் என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டு விமானம் ஏறிச் சென்றுவிட்டான்

என்றும் தெரிவித்தாராம். பரிதாபம், இந்தப் பேச்சுக்கூட புதிய பாணி அல்ல! பழைய கஞ்சி. ஏற்கனவே இங்கு கூவி விற்கப்பட்டுக் குப்பைக்குச் சென்றுவிட்டது.

நான் பயந்தவன் — கோழை — என்று கூறிய அமைச்சர் சுப்ரமணியம், அவ்விதம் கூறத்தக்க அளவு, தமது வீரதீரத்தைக் காட்டினவர் அல்லவே நாட்டவருக்கு என்று கூற நினைக்கிறாய், தம்பி! உனக்கு அவராற்றிய வீரதீரச் செயல் தெரியாது; அவருடைய அஞ்சா நெஞ்சம் உனக்குப் புரியவில்லை. படை பல வரினும், தடைபல நேரிடினும், மன்னன், முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டார்; வீரம் கொப்பளிக்கும்

ஒருமுறை அவர் அயர்ந்து தூங்கும் வேளையில், கூரிய வாட்கள் அவர் உடலில் நாலாபக்கமும் பாய்ந்தன. அவரிடமோ, வாள் இல்லை. அஞ்சினாரா? தூ! தூ! அவரா? அஞ்சுபவரா! ஓங்கி அறைந்தார், இரு கரங்களாலும். அவருடைய கையிலே அறைபட்டு, வாள்கொண்டு குத்துவது போன்றவிதமாக அவரை வெகு பாடுபடுத்திக் கொண்டிருந்த கொசுக்கள் பல செத்தன; உள்ளங் கையிலே, வெற்றியின் சின்னங்களைக் கண்டார்!

இப்படிப்பட்ட 'வீரம்' அவர் நடத்திக்காட்டாமலா இருந்திருப்பார்! இருக்கும், தம்பி! நமக்குத் தெரியவில்லையே தவிர, அவர், ஏதேதோ வீரதீரச் செயல்களைச் செய்திருக்கிறார், அதனால்தான் நான் பயந்து கொண்டு ஓடிவந்துவிட்டேன் என்று கூறுகிறார். வீரர்களுக்கு பயங்காளிகளைக் கண்டால் பிடிக்காதல்லவா?

உப்புச் சத்தியாக்கிரக காலத்தில், எல்லோரும் கடலோரத்தில் உப்புக் காய்ச்சிட, இவர், தமது வீரதீரத்தை உலகு உணர வேண்டும் என்பதற்காக, அலைகளுக்குப் பயந்தோர் கரையில் கிடக்கட்டும், நான் அஞ்சாநெஞ்சன்! கடல் நடுவே சென்று, கொண்டு வருவேன் உப்பு என்று உள்ளே இறங்கிச் சென்று திரும்பி வந்தவராக இருக்கக்கூடும். யார் கண்டார்கள்! இப்படி ஏதாவது வீரச் செயல் செய்திருந்திராவிட்டால் எனக்குத் தைரியம் இல்லை என்பதைக் கண்டுபிடித்துக் கூறிக் கேலி பேசிட மனம் வந்திருக்காதல்லவா?

எல்லோரும், மகாத்மாவின் தலைமை காரணமாகக் காங்கிரஸ் இயக்கம் வீரதீரமாகப் போராடியதால் சுயராஜ்யம் கிடைத்தது என்று எண்ணிக்கொள்கிறோம். உண்மை அதுவாக இருக்காதுபோலத் தோன்றுகிறது! ஒருவருக்கும் கூறாமல், ஒருநாள், இவர் போயிருக்கிறார் இலண்டன் பட்டினம்—எவர்? — அஞ்சா நெஞ்சர் அமைச்சர் சுப்பிரமணியர்! சென்று, சர்ச்சில் வீட்டுக் கதவைத் தட்டி இருக்கிறார் பலமாக.

யார் அது?
நான்தான், அஞ்சாநெஞ்சன்.

புரியவில்லையே.

பயப்படாதவன்! தைரியசாலி!

பெயர்?

சுப்ரமணியம்.

தமிழரா?

இல்லை—இந்தியர்!

இந்த வேளையிலே இங்கு......

எந்த வேளையாக இருந்தால் என்ன? எந்த இடமாக இருந்தால் என்ன? பிரிட்டிஷ் சாம்ராஜ்ய முதலமைச்சராக இருக்கலாம் நீர். அதற்காக, நானு அஞ்சுபவன்?

இந்த உரையாடலுக்குப் பிறகு சர்ச்சில், தள்ளாடி நடந்து வந்து கதவு திறந்துபார்க்க, அங்கு வீரமே வடிவெடுத்ததுபோல இவர் நிற்கக்கண்டு அலறிப்புடைத்து அழுது, என்னை ஒன்றும் செய்துவிடாதீர், நீர் சொல்கிறபடி கேட்கிறேன்; என்று பணிந்து கூற,

பயப்படாதே! நான் சொல்கிறபடி செய்; உயிர் போகாது. உடனே சுயராஜ்யம்கொடு!

என்று இவர் கூற, அவர் உடனே தந்தேன் சுயராஜ்யம் என்று எழுதிக்கொடுக்க, அதனை எடுத்துக் கொண்டு இங்குவந்து, செ! இவ்வளவு காலமாக இந்த மகாத்மாவும் ஜவஹரும், படேலும் அஜாதும் சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று கூவிக்கிடந்தனர், இப்போது அதனை அவர்கள் பெற்றுத்தரவில்லை, நாம்தான், நமது அஞ்சாநெஞ்சு காட்டி, பெற்றுவந்திருக்கிறோம் என்று தெரிந்தால், உலகிலே அவர்களுக்கெல்லாம் உள்ள மதிப்புக்கெட்டுவிடுமே என்று எண்ணிப் பரிதாபப்பட்டு, சம்பவந்தை ஒருவருக்கும் கூறுமல், சர்ச்சிலுக்கே மறுபடியும் தொலைபேசிமூலம் பேசி, சுயராஜ்யம், காந்தியார் மூலம் கிடைத்தது போன்ற நிலைமையை ஏற்படுத்தி இருந்திருக்கிறார். அவ்வளவு வீரதீரச் செயலாற்றியவராக இருந்திருக்கிற காரணத்தால்தான், நான், 'திராவிடநாடு' கேட்டுவிட்டுப் பயந்துகொண்டு ஓடிவந்துவிட்டது, அவருக்குப் பிடிக்கவில்லை. பேசுகிறார் எனக்குத் தைரியம் கிடையாது என்று.

தம்பி! எனக்குத் தைரியம் இருக்கிறதா இல்லையா என்பது கிடக்கட்டும்; இவர் தமது அஞ்சாநெஞ்சினைக் காட்டிட ஆற்றிய அருஞ்செயல்கள் உண்டோ என்பது கூடக் கிடக்கட்டும், பயப்பட்டுக்கொண்டு ஓடிவந்துவிட்டேன் என்று பேசுகிறாரே, எதற்கு? யாரிடம்? என்பதை விளக்கும்படி கேட்கமாட்டார்களா? ஒருவரை ஒருவர் கேட்பது இருக்கட்டும் அவரவரின் மனம் அவரவரைக் கேட்காதா? பயம் ஏற்படவேண்டிய காரணம்?

திராவிடநாடு என்று பேசிவிட்டு, நான் அங்கேயே இருந்திருந்தால், என்ன நேரிட்டு விடும்?

குத்திக் கொல்லுவதாக இருந்தார்களா?

வெட்டி வீழ்த்துவதாகத் திட்டம் இருந்ததா? உயிரோடு கட்டிவைத்துக் கொளுத்த ஏற்பாடு இருந்ததா?

அல்லது, என்னையும் இவரையும், களத்தில் இறக்கிவிட்டு, ஆளுக்கொரு வாளெடுத்துக்கொண்டு போரிடச் சொல்லி, இதில் வெற்றி எப்படியோ அப்படிப் பிரச்சினைக்கு முடிவு என்று ஏதாவது திட்டம் போடப்பட்டிருந்ததா?

திராவிடநாடு கேட்டுவிட்டு டில்லியில் இருந்தால், ஆளாளுக்குமேலே விழுந்து, கடித்துக் கொதரிவிட்டிருப்பார்களா?

இரயில் ஏறச் செல்லும்போது, பெருங் கூட்டம் கூடி, துரத்தித் துரத்திக் கல்லால் அடித்துக் கொன்றுபோட்டிருப்பார்களா?

இரயில் புறப்பட்ட பிறகு உள்ளேயே கத்தி கட்டாரிகொண்டு குத்திப், பிணத்தைத் தூக்கிக் கீழேபோட்டுவிட்டு ஓடிப்போய்விட, ஆட்களை அமர்த்தி இருந்தார்களா?

இவைபோன்ற ஏதோ திட்டம் இருப்பது தெரிந்து நான், பயந்துகொண்டு ஓடிவந்து விட்டேனு?

இவருக்கு இதெல்லாம் தெரிந்திருந்ததா?

இப்படி ஏதாவது நடக்கவேண்டுமென்று இவர் விரும்புகிறாரா?

அந்த விருப்பம் நிறைவேறவில்லை என்று வருத்தப்படுகிறாரா?

விளங்கவில்லையே!

தம்பி! இப்படி எல்லாம் பலரும் கேட்கமாட்டார்களா—எண்ணிப்பார்க்கமாட்டார்களா?

என்ன நடக்குமோ என்று பயந்துகொண்டு ஓடி வந்துவிட்டான் அண்ணாத்துரை என்று இவர் பேசும்போது நான் பயந்தவன் என்பதைமட்டுமா, குறிப்பிட்டுக் காட்டுகிறார்,

அங்கு பயங்கரவாதிகள் உள்ளனர்.

எதையும் செய்வார்கள்.

அவர்களிடம் சிக்கினவன் தப்ப மாட்டான்.

கொலைபாதகர்கள். கொடியவர்கள்!

அவர்களுக்குப் பிடிக்காத ஒன்றைப்பேசி ஒருவன் பிழைக்க முடியாது; வெட்டிப் போட்டுவிடுவார்கள்,

என்பன போன்றவைகளையுந்தானே அமைச்சர் குறிப்பிட்டுக் காட்டுகிறார் என்று பொருள்படும்.

தில்லியில் உள்ளவர்களைப்பற்றி அமைச்சர் சுப்ர மணியம் கொண்டுள்ள கருத்து இதுதானா? கொடியவர் கள்—என்பதுதானா?

நத்திப் பிழைக்கவேண்டும், அல்லது நடுங்கி ஓட வேண்டும்—இரண்டில் ஒன்று—வேறு வழி கிடையாது, அங்கு இருந்து வாழ வேண்டுமானால், என்பதுதான் அமைச்சரின் கருத்தா? என்ன கருத்துடன் அவர் பேசினார் என்பதை விளக்காத காரணம் என்ன? சொல் வதைச் சொல்லிவைப்போம், கேட்பவர்களில் அவரவ ருக்குத் தோன்றியவிதத்தில் அவரவர்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும் என்று எண்ணுகிறாரா?

> திராவிடநாடு கொள்கைபற்றி, நான், இங்கு சட்டசபையில் பேசினேன்—இவர்கள் கூறும் பதில்களைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். ஒரு ஆபத்தும் எனக்கும் நேரிட வில்லை—என் கொள்கைக்கும் ஒரு ஊறும் நேரிடவில்லை — மாறாகப் பல்லைக் கடித்துக் கொண்டு பத்து வருஷத்துக்குப் பிரிவினை பற்றிப் பேசாதீர்கள் என்று இதே அமைச்சர் என்னைக் கேட்டுக்கொண்டார். திராவிடநாடு பற்றி இங்கு பேசியபோது ஒரு ஆபத்தும் நேரிடாது, ஆனால் தில்லியில் பேசினால், சும்மாவிடமாட்டார்கள் என்ற பாவனையில் பேசுகிறாரே, என்ன பொருள்? என்ன செய்து விடுவார்கள் என்று கருதுகிறார்? அல்லது என்ன செய்வதாகச் செய்து வைத்திருந்த ஏற்பாடு நான் ஓடிவந்துவிட்டதால் கெட்டு விட்டது என்று கருதுகிறார்.

அப்படி ஏதாவது ஏற்பாடு இருந்தது அமைச்சருக்குத் தெரிந்து, நான் அதிலே சிக்காமல், தப்பித்துக்கொண்டு விட்டேன் என்பதனால் வருத்தமோ ஏமாற்றமோ ஏற் பட்டு இவ்வாறு அவர் பேசியிருக்கிறார் என்றால், அவ ருக்கு நான் பணிவன்போடு கூறிக்கொள்கிறேன், நான் கடைசி முறையாக அல்ல, முதன் முறையாகத்தான் தில்லி வந்து திரும்பினேன் — மீண்டும் வருகிறேன் — ஏதாகிலும் ஏற்பாடு செய்வதானால் தாராளமாகச் செய்து, காரியத்தை முடித்துக்கொள்ளுங்கள். திராவிடநாடு பெறுவதிலே கிடைக்கக்கூடிய மகிழ்ச் சிக்கு அடுத்தபடியாக எனக்கு மகிழ்ச்சியும் பெருமை யும் தரக்கூடியது, அந்த முயற்சியில் ஈடுபட்டதற்காக, கொடியவர்களின் குத்துக்கும் வெட்டுக்கும் பலியாவது தான். அது எத்துணை விரைவாக நேரிட்டாலும், பரவாயில்லை. நான் இருந்து பேசிக்கொண்டிருக்க வேண்டியவற்றை, எனக்கு இழைக்கப்படும் கொடுமை பற்றி எண்ணிக் குமுறும் மனமும், கொந்தளிக்கும் கண்ணீரும் செய்து முடிக்கும்.

அமைச்சர் எண்ணிப்பார்த்துப் பேசியிருக்க மாட்டார்—ஏளனம் செய்ய வேண்டும் என்று நினைத்து வாயில் வந்ததைப் பேசிவிட்டிருக்கிறார்.

> இராஜ்ய சபையில், திராவிடநாடு பிரச்சனைபற்றி விவாதித்து முடிவுகட்ட வேண்டும், உடனே வா!—என்று அழைப்புக் கொடுத்து வரவழைத்து, பலரும் கூடியது போலவும். நான் என் வரையில் பேச்சை முடித்துக்கொண்டு, மற்றவர்கள் என்னகூறி முடிவு எடுக்கிறார்கள் என்பதனைக் கேட்கா மல், ஊர்திரும்பிவிட்டேன் என்பதுபோலவும் அமைச்சர் பேசுவது அவசரத்தால் ஏற்பட்டு விட்ட அறியாமை.

இருந்திருக்கலாம் — இருந்திருக்கவேண்டும் — முறை அதுதான்—பண்பு அதுதான்—என்ற அளவுக்குச் சரி —அந்த யோசனையை நான் வரவேற்கிறேன், ஆனால் அப்படி இருக்கமுடியாமல் போகும் நிலைமைக்காக, தைரியமில்லை, இருந்தால் தெரிந்திருக்கும் என்றுதான் பேசுவதா? இதற்குப் பெயர், முறையா? பண்பா? அல்லது மிரட்டலா? நான் அங்கு பேசிவிட்டு வந்து விட்டதற்கான காரணம், விளக்கம், இருக்கட்டும் — ஒன்று கேட்கிறேன் அமைச்சரை, அங்கும் சரி, மக்கள் சபையிலும் சரி, பேசிடும் உறுப்பினர் அனைவரும், தமது பேச்சுப்பற்றி மற்றவர்கள் என்ன கருத்துத் தெரி விக்கிறார்கள், அல்லது சபைக் கட்சியின் தலைவர் என்ன பதில் தருகிறார், என்று இருந்து கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்களா? நெஞ்சில் கைவைத் துச் சொல்லட்டும்.

இராஜ்ய சபை—மக்கள் சபை, இரண்டு இடங்களி லும் குடிஅரசுத் தலைவரின் உரைமீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசியவர்கள் எவரெவர் அவர்கள் அனைவரும் அந்த விவாத முடிவின்போது நேரு பதில் அளிக்கும்போது, அவையில் இருந்து தீரவேண்டும் என்பதற்காக, இருந்தனரா? விளக்கமாக இதனை எடுத்துக் காட்டுவார்களா?

எத்தனையோ உறுப்பினர்கள், தமது கருத்தினைத் தெரிவித்துவிட்டு, வேறு அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிட்டனர் — பதிலுரை அளிக்கப்பட்டபோது அவையில் இருந்ததில்லை.

அவர்களெல்லாம் போகலாம் — நீ — போகலாமா? என்று கேட்பதானால், நான், அந்த—நீ—என்பதற்கான முக்கியத்துவத்தை அறிய விரும்புகிறேன்.

மற்றதெல்லாம் பேசிவிட்டுச் சென்றுவிடலாம், ஆனால் திராவிடநாடு பேசிவிட்டுச் சென்றுவிடலாமா என்றால், அது 'திராவிடநாடு' பிரச்சினையின் முக்கியத் துவத்தை எடுத்துக் காட்டுவதாகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

பாவி அங்கு போயும் துவக்கிவிட்டானே திராவிட நாடு பேச்சினை என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்ப வர்களுக்கு ஒரு ஆறுதல் கூறிவைப்போம் என்ற முறையில் எதையோ பேசிவிட்டார்—இதற்கு நான் என்ன பதில் கூறுகிறேன் என்று தெரிந்துகொள்ளப் பயந்து ஓடிவிட்டார் பதவிப் பாதுகாப்புள்ள தில்லிக்கு-குடும்பத்துடன் என்றல்லவா நான் கூறவேண்டும், அவருடைய பாணியிலே நான் பேசுவதானல்.

குடிஅரசுத் தலைவர் உரைமீது இராஜ்ய சபையில் பேசியவர்கள் பலர்—அவர்களில் பலர், பதிலுரை கூறப்படும்போது அவையில் இல்லை; அப்படி அங்கு இல்லாதவர்களிலே நானும் ஒருவன். ஆனல், நான் அங்கு இல்லாததைத்தான், எரிச்சல் கொண்டவர் அனைவரும் எடுத்து வைத்துக்கொண்டு ஏளனம் செய்து பேசுகிறார்கள். நோக்கம் என்ன தெரியுமல்லவா? இராஜ்ய சபையில் அனைவரும் கவனிக்கத்தக்கவிதமாகத்திராவிடநாடு கொள்கை பற்றிய பேச்சுப் பேசப்பட்டது, நமது கழகத்தவர் உள்ளங்களிலே, மகிழ்ச்சியும் எழுச்சியும் பெரும் அளவுக்கு ஏற்படுத்திவிட்டதல்லவா; நமது கழகத்திலே இணையும் ஈடுபாடு கொள்ளாதவர்களும்கூட, இது பற்றி, வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த குரலிற் பேசலாயினரல்லவா, அது பொறுக்கவில்லை. அந்த மகிழ்ச்சி, உற்சாகத்தை இவர்கள் அனுபவிப்பதா, அதைக் கண்டு நாம வாளா இருப்பதா என்ற எண்ணம்; உடனே ஏதாவது பேசி எரிச்சலூட்டிவிட வேண்டும் என்பது அவர்கள் கையாண்ட முறை.

நான் அங்கு பேசாது இருந்துவிட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். என்ன கூறுவார்கள் தெரியுமல்லவா?

> இதற்கு எதற்கு அங்கு போனன்?
> பேசமுடியவில்லை என்றல், அங்கு ஒட்டிக் கொண்டிருப்பானேன். உதறித்தள்ளிவிட்டு வரவேண்டியதுதானே!
> பேச வாய்ப்புக் கிடைக்கும் வரையில், அந்த வாசற்படியிலேயே விழுந்துகிடக்க வேண்டுமே தவிர, ஊர் ஏன் திரும்புகிறன்? என்ன சாதனையைக் காட்ட?

தம்பி! இந்த 'ரகமாக'ப் பேசி இருப்பார்கள்—நம்மைப் பற்றிப் பேசுவதையே தொழிலாகவும் கலையாகவும் ஆக்கிக்கொண்டவர்கள். பேசிவிட்டுத் திரும்பிவராமல், அங்கேயே இருந்து, மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டு இருந்துவிட்டு வருகிறேன் என்று வைத்துக்கொள்ளேன். அப்போது மட்டும் என்ன! இவர்கள் வாய்க்கு மென்றிட ஒன்றும் கிடைக்காது என்று எண்ணுகிறய்.

> பேசினனே, உடனே வந்துவிடக் கூடாதா? விவரம் தெரியாதவன். அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். இவன் பேச்சுக்காக ஆளாளுக்கு மெடல் கொடுப்பார்கள் என்று எண்ணிக்கொண்டான் போலும், செம்மையாகக் கொடுத்தார்கள், ஒவ்வொருவரும். எல்லாவற்றையும் வாங்கித் தோளில் போட்டுக்கொண்டு, உட்கார்ந்திருந்தான். ஒரு வார்த்தை மறுத்தானு? முடியுமா? குறுக்கிட்டுப் பேசினனு? அந்தத் தைரியம் வருமா?

இப்படிப் பேசித் தமது அற்பத்தனத்தைக் காட்டிக் கொண்டிருந்திருக்க முடியும்.

மற்றவர் பேசும்போது நான், மறுத்துப்பேச, குறுக்கிட, விளக்கம்கூற, பதிலுரைக்க முற்பட்டிருப்பின், இவர்கள் வாயடைத்துப் போவர் என்று எண்ணுகிறயா, தம்பி! அதுதான் இல்லை. கைவிட்டு எடுக்கும் அளவு கிடைக்காவிட்டால், சுறண்டி எடுத்துத் தின்பவர்கள் உண்டல்லவா? அதுபோல அப்போதும் இவர்கள் பேச விஷயம் கிடைக்காது என்று எண்ணதே.

> பாரீர் இவன் பண்பற்ற போக்கை.
> பாராளுமன்ற முறை அறியாது நடந்து கொண்டான.
> இவன் பேசினன்—சபை கேட்டுக்கொண்டது—இவன் பேச்சில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி மற்றவர்கள் பேசும்போது, இவன் குறுக்கிடுவதா? மறுத்துப் பேசுவதா? பாராளுமன்றப் பண்பாட்டைப் பாழ்படுத்துவதா? சந்து முனையில் இருக்கிற வனைப்பிடித்துப் பாராளுமன்றம் அனுப்பினல் வேறு என்ன காணமுடியும்? இப்படிப்பட்ட காலித்தனத்தைத்தான்.

இப்படிப் பேசிச் சுவைபெற முடியும்.

நான் என்ன செய்கிறேன், எதை எப்படிச் செய்கிறேன் என்பதிலே ஏற்படும் கருத்து வேறுபாடா காரணம், இவர்கள் என்னை எதிர்த்துப் பேசுவதற்கு. ஊரறியுமே உண்மைக் காரணத்தை; நான் ஏன் இன்னமும் இருக்கிறேன், நான் எப்படி எண்ணற்றவர்களின் அன்பினைப் பெறலாம், என்பதல்லவா, என்னை இவர்கள் இழிமொழியால் தாக்குவதற்குக் காரணம். ஆகவே, நான் எவ்விதம் பேசினலும், எவ்விதம் நடந்துகொண்டாலும், இவர்கள் தமது குரோதத்தைக் கக்கியபடிதான் இருப்பார்கள்.

இந்த இயல்பு கொண்டவர்கள் நிரம்ப உளர் என்பது எனக்கு நன்கு தெரிவதால்தான், நான் அவர்கள் ஏசிப் பேசுவது கேட்டு, எரிச்சல் அடைவதில்லை.

காங்கிரசில் உள்ள பலர், பிரசார மேடை ஏறும் போதுதான், நம்மையும் நமது கொள்கைகளையும்

தாக்கிப் பேசுகிறார்கள்—அதிலும் இழிமொழியில்—காரணம் காட்டி அல்ல.

நான், இராஜ்யசபையில் பேசியபோது, எனக்கு எதிர்ப்புறமாக, மாடியில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அழகேசன் அமர்ந்திருக்கக்கண்டேன். ஆச்சரியப்பட வில்லை, ஏனெனில், அதற்கு முன்பே, தில்லியில் இரண்டொருமுறை அவருடன் பழகவும் உரையாடவும் வாய்ப்பு ஏற்பட்டதால், அவர் என்பேச்சைக் கேட்க வருவார் என்று எதிர்பார்த்திருந்தேன். இங்கு அவரிடம் பேச வாய்ப்பு ஏற்பட்டதில்லை. இரண்டொரு திருமணங்களிலே சந்தித்ததோடு சரி. மற்றப்படி ஒவ்வொரு மாலையும், நானும் அவரும் கீரியும் பாம்பும் போலத்தானே! தில்லியில்தான், கலகலப்பாகப் பேசினோம். அவரை அழைத்துக்கொண்டுவந்து, என் பக்கம் அமரச்செய்தவரே, அமைச்சர் சுப்ரமணியம்தான்.

மக்கள் சபை கூடுமிடத்துக்கும் இராஜ்யசபை கூடும் இடத்துக்கும் நடுவே, ஒரு மையமண்டபம் இருக்கிறது. அங்கு, உறுப்பினர்கள் ஓய்வுஎடுத்துக்கொள்ள, உரையாட வருகிறார்கள். நாங்கள் ஒருபுறம் உட்கார்ந்திருந்தோம். அதற்கு எதிர்ப்புறத்திலே சற்றுத் தொலைவிலே, அமைச்சராகிவிட்ட சுப்ரமணியமும் அமைச்சராக வேண்டிய அழகேசனும் இருந்தனர். சிறிது நேரத்துக்கெல்லாம் இருவரும் நான் இருக்கும் இடமாகவந்தனர்; என்னைக் கண்டதும். அமைச்சர், அழகேசனாரைக் காட்டி, "அழகேசன்!" என்று அறிமுகம் செய்யும் முறையிலே கூறினார், மூவரும் உட்கார்ந்து சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு ஒவ்வொரு முறை சந்திக்கும்போதெல்லாம்,

> தில்லி எப்படி இருக்கிறது.
> இருங்கள், நல்லது.
> வீடு கிடைத்துவிட்டதா?
> நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம்.

என்று இருவரும் கூறுவார்கள்.

தமிழ்ச் சங்கத்திலே தரப்பட்ட வரவேற்பின்போது கூட, நானும் அழகேசன் அவர்களும் பக்கம் பக்கமாக உட்கார்ந்துகொண்டிருந்தோம் — அதனை ஒரு வியப்பான காட்சியாகப் பலரும் அங்குகூடக் கருதினர்.

அமைச்சர் பக்தவத்சலனாரின் திருமகன் தில்லியில் வேலையில் இருப்பதுகூட எனக்கு அங்குபோன பிறகுதான் தெரியும்—அதுவும் அழகேசன் கூறியதால்.

இப்படி ஒரு பழக்கம் ஏற்பட்டதால், நான் பேசிய அன்று அவர் வருவார் என்று நினைத்தேன்; வந்திருந்தார்.

நான் பேசியானதும் அவை கலைந்தது, மீண்டும் பிற்பகல் இரண்டுமணிக்குக்கூட. நான், விமானடிக்கட் விஷயமாக அலுவலகம் சென்று விசாரிக்கப்போய், அங்கு ஓர் இருக்கையில் அமர்ந்தேன்—பேசி அரை மணிநேரமாகிவிட்டது—அழகேசன் வந்தார், கைகுலுக்கினார், என் பக்கத்தில் அமர்ந்தார்—அன்று இரவு சென்னை செல்வது பற்றிக் கூறினேன்—நான் சொல்லி இருக்கிறேன், நிச்சயம் இடம் கிடைக்கும் என்று கூறினார். அப்போது; மக்கள்சபை உறுப்பினர் பாண்டேசுரம் கோவிந்தசாமி (நாயுடு) வந்தார்.

> வந்திருந்தீர்களல்லவா பேச்சைக் கேட்க.
>
> இல்லை... வேறு வேலையாக இருந்து விட்டேன்.
>
> நான் போயிருந்தேன். நன்றாகப் பேசினார். எல்லாவற்றையும் பேசினார். திராவிட நாடு கொடு என்றெல்லாம் கேட்டுவிட்டார்.

இப்படி அழகேசனார் அவரிடம் கூறினார். நானும் பேச்சை மாற்றினேன்.

> ஏன் இவைகளைக் கூறுகிறேன் என்றால்,
>
> கேட்கும்போது கடுகடுப்பு ஏற்படுவதில்லை. கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போதும் கட்சி மேடை ஏறிப் பேசும் போதும்தான் கோபம், வெறுப்பு எல்லாம் கொந்தளிக்கிறது என்பதைக் கூறத்தான்.
>
> கூடப்பழகுவது, அன்பு காட்டுவது, உதவிசெய்வது, பாராட்டுவது என்பது வேறு, கொள்கைக்காகப் போராடுவது முற்றிலும் வேறு, தேன்போல இனிக்கும் எங்கள் பேச்சு, மற்றச் சமயங்களில், ஆனால் கொள்கை விஷயம் வருகிறபோது தேளாகக் கொட்டுவோம்.

இப்படிக் காங்கிரஸ் தலைவர்கள் கூறுவது முறை; நான் அதனைக் குறைகூறவில்லை. நாலு தடவை கட்டுடன் பழகிவிட்டால், அவரவர் தத்தமது கொள்கையைவிட்டு விடவேண்டும் என்று நான் கூறமாட்டேன்; எதிர்பார்க்கவும் மாட்டேன். ஆனால் ஒருவருக்கொருவர் பழகிய பிறகேனும், அவரவர் தத்தமது கருத்துகளை, கொள்கைகளை, உறுதியுடன், ஆனால்அதேபோது, இழிமொழி பழிச்சொல், ஏளனம், இன்றி எடுத்துக்கூறும் 'பண்பு' வளரவேண்டாமா? பண்புடன் பேசித் தமது கொள்கைக்கு வலிவு தேடிட முடியாது என்று எண்ணுபவர்களைப்பற்றியோ, அவர்களின்கொள்கைகளைப்பற்றியோ உலகம் என்ன மதிப்பீடு தரும்...? இவைகளை எண்ணிப் பார்க்காமல், அமைச்சர் தமது கட்சியிலே உள்ளவர்களுக்கு மகிழ்ச்சிதரவேண்டும் என்ற ஒரே நோக்குடன் பேசிவிட்டார். நாலடி உயரம் ஏறிக்கொண்டு நாய்ப்பறை கொட்டினாலே, நல்லியல்பு நசித்தே போகவேண்

டுமா? மற்றச் சமயத்திலே எண்ணுவது பேசுவது மறந்துபோகவே வேண்டுமா?

தில்லியில் ஒருநாள் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தோம். இதிலே அமைச்சர் சுப்ரமணியமும் அழகேசனும் இல்லை. அதனை முன்கூட்டியே கூறிவிடுகிறேன் —ஏனெனில் இனிக் கூறப்போவதை அவர்களுடன் இணைத்துப்பார்க்காதீர்கள் என்று கேட்டுக்கொள்ள.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள், பத்திரிகைத் துறையினர், வியாபாரிகள், கலந்துகொண்டனர்,

ஒரு பிரபல காங்கிரஸ் தலைவர்—சுதந்திரத்துக்குப் பிறகு கதர் போட்டவர் அல்ல—நீண்டகாலத்துக் காங்கிரஸ்காரர், என்னை உடன் வைத்துக்கொண்டு, பலருக்கு என்னை ஆர்வத்துடன் அறிமுகப்படுத்தியபடி, அரசியல் நிலைமைகளைப் பேசிக்கொண்டிருந்தார், சற்று உரத்த குரலில், பத்துப்பேருக்குப் புரிகிறபடி.

> திராவிடநாடு கேட்கிறார்கள்.
>
> கேட்கட்டும். கேளுங்கள். நன்றாகக் கேளுங்கள். ஏன் பிரிந்துபோக வேண்டும் என்று கூறுகிறீர்கள் என்று எவனாவது கேட்டால், திருப்பிக் கேளுங்கள், ஒன்றாக இருந்து நாங்கள் என்ன பலனைக் கண்டோம்? பெரிய தொழிற்சாலை உண்டா, இரயில்பாதை உண்டா, இரும்புத் தொழிற்சாலை உண்டா? என்ன கிடைத்தது? எதற்காக ஒன்றாக இருக்கவேண்டும் என்று கேளுங்கள்,

என்று என்னைப்பார்த்துக் கூறிவிட்டு, சூழ இருந்த காங்கிரஸ் பிரமுகர்களைப் பார்த்தபடி,

> சிலோன் விஷயத்தைப் பாருங்கள். அங்கு நமக்கு எவ்வளவு கொடுமைகள் செய்கிறார்கள், பதறுகிறார்களா? அதற்காகப் பரிகாரம் தேடுகிறார்களா? இல்லையே. அதுவே தென்னாப்பிரிக்காவிலே ஒன்று நடந்துவிட்டால் எவ்வளவு ஆத்திரம் காட்டுகிறார்கள். ஏன்? அங்கே வடநாட்டுக்காரன், சிலோனில் இருப்பவன் தென்னாட்டுக்காரன். அதுதான் வித்தியாசம்.

என்று, எனக்கே தூக்கிவாரிப் போடும்படி பேசிக்கொண்டே இருந்தார். நானாகத்தான், வேறு பக்கமாகப் பார்வையையும் பேச்சையும் திருப்பிவிட்டேன்.

காங்கிரஸ் தலைவர்களிலே பலர் — தென்னாட்டுக்காரர்கள் — தனியாக வெளியிடும் கருத்து, திராவிட நாடு பிரிவினைக்கொள்கைக்கு முற்றிலும் எதிர்ப்பானது அல்ல. அந்தக் கொள்கைக்கு ஆதாரம் பலவற்றை எடுத்துக்கூடக் கூறுகிறார்கள். கட்சிப்பிரசார மேடை மீது ஏறிய உடனே எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டி வருகிறது. அப்போது, 'பாரதம்'பற்றிய புகழுரைதான், இந்த அண்ணாத்துரைக்கு என்ன தெரியும் என்ற ஏளனம்தான்.

தம்பி! நான் யோசித்துப் பார்த்த அளவில்,வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது, தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று உணர்ந்தும், உரைத்தும், வாதாடியும் போராடியும் வருகிற அளவுக்கு இசைவு தருகிற காங்கிரஸ் தலைவர்கள்கூட, வடநாட்டுடன் இணைந்திருந்து, ஒத்துழைத்துத் தென்னாட்டுக்குச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று நினைக்கிறார்கள்.பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காங்கிரஸ் கட்சி எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தியபோது, ஜஸ்டிஸ் கட்சியினர்,வெள்ளை அரசுடன் ஒத்துழைத்து நாட்டுக்கு நன்மைகளைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டார்களே, அதுபோல.

மற்றோர்விதமான காங்கிரசார், தென்னாட்டவர், தி. மு. கழகம், பிரிவினை பேசப் பேசத்தான், நமக்கு நல்ல 'கிராக்கி' ஏற்படும்; தென்னாட்டுக்காரர்களைத் திரட்டி அந்தப் படையைக் கொண்டு பிரிவினைக்காரரை அழிக்கத் திட்டமிடுவார்கள், அப்போதுதான், நமக்கெல்லாம், தளபதிகள் நிலை கிடைக்கும் என்று நினைக்கிறார்கள்.

> பொறுத்திருக்க வேண்டும் பொங்கி எழக்கூடாது என்போரும்,
>
> காலம் வரும், கோலத்தை அதுவரையில் காட்டக்கூடாது என்போரும் உள்ளூரப் பாரத ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டு இல்லை.

வடநாடு சென்று பல்வேறு துறைகளிலே பணியாற்றி வருபவர்களில் மிகப் பலருக்கு, வடநாட்டு ஆதிக்கம் வளருவது பற்றிய கவலையும், எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கலக்கமும் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் வலுவடைவதும், பிரிவினைக் கொள்கைக்குச் செல்வாக்குக் கிடைப்பதும் அவர்களுக்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது,மகிழ்ச்சி அடைகிறார்கள்.

ஆனால் அவர்கள் ஆயிரம், இரண்டாயிரம் சம்பளம் வாங்கும் அதிகாரிகள் அல்ல. பிழைக்க வந்தவர்கள், வாட்ட வருத்தம் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள்.

தம்பி! கரோல்பாக் எனும் பகுதியில், கழகம் அமைத்து எங்களை அழைத்துச் சென்று பாராட்டு விழா நடத்தினார்கள். யார்? மாளிகை வாசிகள் அல்ல! அவர்கள், கண்டும் காணாததுபோல் இருந்துவிடுகிறார்கள்! பெரிய பெரிய அதிகாரிகள் அல்ல, அவர்கள் அச்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள், சிலர் சுய

நலத்துக்கு ஆட்பட்டுக் கிடக்கிறார்கள். எங்களை அழைத்துச் சென்றவர்கள் கூலிவேலை செய்பவர்கள், மூட்டை தூக்கிகள், வண்டி இழுப்பவர்கள், வீட்டுவேலை செய்பவர்கள், பாத்திரம் துலக்குபவர்கள் — சின்னாளப்பட்டி, இராசிபுரம் போன்ற இடங்களிலிருந்து பிழைக்க வந்தவர்கள்.

அவர்கள் குடி இருக்கும் இடம், சுடுகாடாக இருந்த இடம்.

இவர்களுக்கு இங்கு ஏழுபேர் வந்திருப்பதே, மாடமாளிகை கட்டிக்கொண்டதுபோலத் தோன்றிவிட்டது. இங்கு கேட்பதுபோல, வாழ்க! முழக்கம் எழுப்பி வரவேற்றனர்.

இவர் போன்றவர்கள் வெளிப்படையாக முழக்கமிடுகிறார்கள்.

அலுவலகங்களிலே உள்ளவர்கள், மனதிலே அந்த எண்ணத்தை வைத்துக்கொண்டு குமுறுகிறார்கள், வதைபடுகிறார்கள்.

வடக்கும் தெற்கும் வெவ்வேறுதான் என்பதனை வாழ்க்கையின் பல கோணங்களிலிருந்தும் அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

வேற்றிடத்தில், வெளிநாட்டில் வந்து சிக்கிக்கொண்டு கிடக்கிறோம், விடுதலை என்று கிடைக்குமோ, வீடு என்று திரும்பிச் செல்லமுடிகிறதோ என்ற ஏக்கம் அவர்களைத் துளைக்கிறது.

நாலாயிரம் ஐயாயிரம் சம்பளம் வாங்கும்அமைச்சர்களுக்கு உள்ள 'பாரதிய' உணர்ச்சியைவிட வெறும் உறுப்பினர்களுக்குக் குறைவாகத்தான் இருக்கிறது. கட்சி வேகம் காரணமாகத்தான், அவர்கள் பிரிவினையைப் பலமாக மறுத்துப் பேசுகிறார்கள்—நம்பிக்கையாலோ, உள் உணர்ச்சியாலோ அல்ல.

பிரிவினைக்கொள்கை வலுவடைகிறதா என்று பார்த்துவிட்டுப் பிறகு சேரலாம் என்று எண்ணியபடி வேலி ஓரத்தில் உள்ளவர்களும் நிரம்ப இருக்கிறார்கள்.

அண்ணன்,



4-ம் பக்கத் தொடர்ச்சி

சிறையிலிடப்படும் நிலையும் வந்திருக்காதே!

அடுத்த நாள் டிசம்பர் 23. என் இளைய மகன் பியரீ. சுவிட்சர்லாந்தில்தான் இருந்தான்—நலத்தோடு, நல்ல பாதுகாப்போடு. அவனிடம் நான் வாக்குக்கொடுத்துவிட்டு வந்திருந்தேன் 'கிறிஸ்துமஸ்' விழாவுக்கெல்லாம் உன் அண்ணனை உன்னிடம் கொண்டுவந்து ஒப்படைக்கிறேன்' என்று. ஆனால் இப்போது நான் தீய செய்தியையல்லவா கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தத் தீய செய்தி என் வாக்கைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதபடி என்னைத் தடுத்துவிடுமோ என்னவோ!

நாங்கள் ஊரில் இல்லாதபோதே எங்களுக்குத் தண்டனை விதித்திருந்தார்களாம். நண்பர் ஒருவர் சொன்னார். எனக்கும், என் கணவருக்கும் பன்னிரண்டு வருடச் சிறைத் தண்டனையாம்.

பெருந்துயரம் வந்து என்னைக் கப்பிக்கொண்டது. ஒரு கணம் அதில் ஆழ்ந்துகிடந்தேன் நான். அப்போதுதான் திருமதி டோத்தின் மகன் ஜானேஸ் அங்கு வந்தான். அவன் எதிர்பாராத தொரு செய்தியையும் கொண்டுவந்தான்.

அவன் ஒரு கம்யூனிஸ்டு அல்ல. எனினும் 'சாபாத்நெப்' என்னும் கம்யூனிஸ்ட் செய்தித்தாள் அலுவலகத்தில் அவன் வேலைசெய்து வந்தான். அடுத்த நாள் அவன் வேலை செய்யும் அலுவலகத்திலிருந்து செய்தித்தாள் கட்டுகளோடு ஊர்தியொன்று புறப்படவிருக்கிறது என்றும், அந்த ஊர்தி எல்லைப்புறத்துக் கருகிலுள்ள நகர் ஒன்றுக்குச் சென்றுவிட்டுவரும் என்றும் அவன் சொன்னான். அது கிறஸ்துமஸ் சமயமாக இருப்பதால் அப்படிச் செல்லும் அந்த ஊர்தியில் அங்கே வேலைசெய்யும் ஊழியர்கள் சிலரும் பயணம் செய்யவிருக்கிறார்கள் என்றும் அவன் சொன்னான்.

அகலவிரித்த கைகளோடு புன்னகையை மலர்த்திக்காட்டிக்கொண்டு ஜானேஸ் பேசினான்; "திருமதி பின்ட் சென்தி அவர்களே, நீங்களும் உங்கள் நண்பர்களோடும் உறவினர்களோடும் கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடவேண்டாமா? அந்த ஊர்தியில் ஏறிச் சென்றால் எல்லைப்புறத்தைச் சுலபமாகத் தாண்டிவிடலாமே! இதைவிட வேறு அருமையான சந்தர்ப்பம் எப்போது கிடைக்கப் போகிறது?"

சோம்டாத்தெலி என்னும் எல்லைப்புற நகருக்கு அந்த ஊர்தி கிளம்பியது. நானும் டாம்மியும் அதில் ஏறிக்கொண்டுவிட்டோம். எங்களுடன் ஜானேசும் வந்தான்.

பாதியில் தவிப்பு

எல்லைப்புறத்துக்கு இன்னும் பல கல் தொலைவிருந்தது. திடீரென்று ஊர்தி நின்றுவிட்டது — ஏதோ கோளாறோடு. இனி அது கிளம்பாது.

"மற்றவர்களோடு நீ போய்விடு; இங்கே அபாயம் ஒன்றும் இல்லை" என்று நான் ஜானேசிடம் கூறினேன். ஜானேஸ் என் வார்த்தையை ஏற்றுக்கொள்ளவில்லை. "உங்களை நான் தனியே விட்டுவிட்டுச் செல்லமாட்டேன். அப்படி நான் செய்தால் என் தாய் என்னை மன்னிக்கவேமாட்டாள்!" என்று பிடிவாதமாக நின்றான் அவன்.

பிறகு நாங்கள் அங்கிருந்த மத குருவின் வீட்டுக்குச் சென்றோம். இரவு நாங்கள் அங்கே தங்குவதற்கு ஜானேஸ் ஏற்பாடுகள் செய்தான். மறுநாள் எல்லைப்புறக் காவற்படை இரட்டிப்பாக்கப்பட்டிருக்கும் செய்தி எங்களுக்கு எட்டியது. இருள் சூழும்வரை காத்திருந்து, பிறகு முயல்வதென்று நாங்கள் தீர்மானித்தோம்.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மதகுரு எல்லைப்புறத்திற்குப்போக வேண்டிய வழியைக் காட்டினர். வயல்வெளி வழியே நாங்கள் நடந்து சென்றோம். எங்கணும் பனிக்கட்டிகள் நிறைந்துகிடந்தன. அண்மையில்தான் அந்த வயல்கள் வேறு உழப்பட்டுக்கிடந்தன. டாம்மி ரப்பராலான மிதியடிகள் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால் என்னுடைய மிதியடிகள் தண்ணீரில் நன்ருக ஊறிப்போயிருந்தன. கால்களுக்கு மிக்க உபாதையைத்தந்தன.

அடுத்திருந்த சிற்றூரை அடைந்தபோது நான் முற்றிலும் நினைவிழந்த நிலைக்கு வந்துவிட்டேன். அங்கும் ஒரு மதகுருதான் எங்களுக்கு உதவி செய்ய முன்வந்தார்.

அந்த வீட்டிலிருந்த வேலைக்காரி என் மிதியடிகளை வெட்டியே எறிந்துவிட்டாள். ஏனென்றல் என் கால்கள் நன்ருக வீக்கங் கண்டுவிட்டன. மதகுருவின் பழைய செருப்புக்களிரண்டையே என்னிடம் கொண்டு வந்து கொடுத்து அணியும்படி செய்தாள் அவள். திரும்பவும் எல்லையின்மீது நாங்கள் கிளம்பினோம். இருளை எதிர்த்துக்கொண்டு சென்றோம். பனிக்கட்டியின்மீது நடந்தோம். அந்தப் பனிக்கட்டியும், காரிருளும் சேர்ந்துகொண்டு சிறைவாசத்துக்கே எங்களை அனுப்புவது போல் தோன்றின.

மற்றொரு சிற்றூரையடைந்தோம். இந்தத் தடவை கருமான் ஒருவர் எங்களுக்குஉதவிபுரிய முன்வந்தார். ‘எழுநூறு ஆஸ்திரிய சில்லிங்குகள் கொடுத்தால், நான் உங்களை அருகாமையிலுள்ள ஆஸ்திரிய சிற்றூர் ஒன்றிற்கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்’ என்றார் அவர். அது நல்லதாகிவிட்டது. ஜானேசிடம் நான் விடைபெற்றுக்கொண்டேன்.

கருமார் எங்களைச் சும்மாவிட்டுவிட்டுச் சென்றுவிடவில்லை. உதவிகள் பலவும் புரிந்தார். அந்த முதல் ஆஸ்திரியச் சிற்றூரிலிருந்து நான் வாடகையூர்தியொன்று அமர்த்திக் கொண்டேன். இரண்டே மணி நேரத்தில் வியன்னவுக்குச் சென்றுவிட்டேன். அங்கிருந்து சுவிட்சர்லாந்துக்குத் தொலைபேசியில் பேசினேன்.

பெர்னேயிலுள்ளோரை நான் தொலைபேசியில் கூப்பிட்டதை ஏற்றுப் பதில் வந்து கிட்ட நெடுநேரமாயிற்று. கடைசியில் என் மகன் பியரீயே பேசினன். அவன் தன் ஆவலை எவ்வளவு தெளிவாக என்னிடம் வெளிப்படுத்திப் பேசினன் தெரியுமா?

“அவனை அழைத்துவந்துவிட்டேன்.” என்று கத்தினேன் நான் “கிறிஸ்துமஸ் விழாவுக்கு நாட்களாகிவிட்டன. என்றலும் பரவாயில்லை. என் கண்ணே, உன் அண்ணனை நான் அழைத்துவந்துள்ளேன்!”

பெர்னே நிலையத்தில் முதல் முறையாக என் மக்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டார்கள். டாம்மிக்கு அப்போது பத்து வயது நிரம்பியிருந்தது. பியரீ ஆறுவயதை அடைந்திருந்தான். நாங்கள் கீழே இறங்கியதும் ஒரு குழப்பமான தயக்கம் அங்கே நிலவிநின்றது. சிறுவர்கள் இருவரும் ஒருவரையொருவர்பார்த்துக்கொண்டார்கள். அப்போது என் கணவர் பியரீயை முழங்கையால் மெல்லச் சீண்டினர். உடனே இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள். சிரித்து மகிழ்ந்தார்கள்.

இப்போது? எங்கெங்குமுள்ள இரண்டு சகோதரர்களைப்போலவே அவர்களுமிருக்கிறர்கள்,

நான்? இப்போது மகிழ்ச்சியோடுதான் இருக்கிறேன். என் காலை முதலில் வெட்டிஎடுத்துவிடவேண்டுமென்றுதான் மருத்துவர்கள் சொன்னர்கள். ஆனல், அடுத்தடுத்து நடத்திய அறுவைகளால் என் கால் குணமடைந்துவிட்டது. என்றலும் தழும்பு மாறவில்லை. அந்தப் பயங்கரப் பயணத்தின் பசுமை என் உள்ளத்தில் நின்று என்றென்றும் அச்சுறுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

கம்யூனிஸ்டுகளின் ஆதிக்க வெறியால் சொந்த நாட்டில்தான் உரிமை வாழ்வு வாழ முடியாது போயிற்று. இப்படி வெளி நாட்டில் வந்தாவது குடும்பத்தோடு உரிமையோடு வாழ முடிகிறதே, இதற்காக மகிழ்வதில் தப்பில்லை. இந்தமகிழ்ச்சியோடு நாங்கள்பட்ட துன்பத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இதற்காகக் கொடுத்த இந்தத் துன்பம் என்னும் விலை சிறிது என்றுதான் சொல்ல வேண்டும்.

கம்யூனிஸ்டுகளுக்கு நாட்டுப் பற்றைவிடக் காட்டிக்கொடுக்கும் பற்றுத்தான் மிகுந்திருக்கின்றது. விடுதலை வேட்கையைவிட மக்களைத்துன்பப்படுத்தும் வேட்கைதான் மிகுந்திருக்கின்றது என்பதை எடுத்துக்காட்ட எத்தனையோ நிகழ்ச்சிகள் உள்ளன. அவ்வகையில் அங்கேரியில் இந்தக் கம்யூனிஸ்டுக் கொடியவர்கள் நடத்திய வெறிகூத்துப் பெரிது. அதில் அடங்கிய நிகழ்ச்சிகள் பல. அந்த நிகழ்ச்சிகளில் சேயிடமிருந்து தாயைப் பிரித்த நிகழ்ச்சியும் ஒன்று. கம்யூனிஸ்டுகளின் மெய்யான உருவையும், மெய்யான நிறத்தையும் தெரிந்துகொள்ள இந்த உண்மை நிகழ்ச்சி துணையாக நிற்கட்டும்.

★

மறைவு

மிருதங்க மேதை பழனி சுப்பிரமணியம் அவர்கள் தமது 53-வது வயதில் சென்னையிலுள்ள ஒரு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தவர், நோயாற்று 27—5—62-ல் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

மிருதங்கப் புலமையில் தனது தந்தையையே ஆசிரியராகக்கொண்டு பயிற்சி பெற்ற காரணத்தால், அவர் ஒரு ஈடு இணையற்ற மேதையாகத் திகழ்ந்தார். அவருடைய இடத்தை இனி யார் நிரப்புவார்கள் என்று எண்ணும் அளவுக்கு அவரது புலமை உயர்நிலையை அடைந்திருந்தது.

அவரது பிரிவால் வருந்தும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் குறிப்பாக இசை உலகிற்கு நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, “திராவிட நாடு” அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.